01-08-2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழக காய்கறிகளுக்கு சான்றிதழ்: தமிழக அரசு தீவிரம்



'சுகாதாரத்துறை சான்று பெற்று, எடுத்து வரப்படும் காய்கறிகளை மட்டுமே, வரும், 4ம் தேதி முதல் அனுமதிப்போம்' என, கேரளா அறிவித்துள்ளது. இதனால், தமிழக வியாபாரிகளுக்கு, சுகாதார சான்று வழங்கும் பணியை, அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

### 500 டன் காய்கறிகள்:

தமிழகத்தில், கோவை, திண்டுக்கல், கன்னியாகுமரி, தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து தினமும், 300 லாரிகள் மூலம், கேரளாவிற்கு, 500 டன் காய்கறிகள் செல்கின்றன. உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், வாழைக்காய், வாழைப்பூ, காலிபிளவர், குடைமிளகாய், சாம்பார் வெங்காயம், நூக்கல், கேரட் போன்ற காய்கறிகள் செல்கின்றன.இந்த காய்கறிகளை, தமிழக விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்து,

சிறு மற்றும் பெரிய வியாபாரிகள், கேரளாவுக்கு அனுப்புகின்றனர். பெரிய

விவசாயிகள் சிலர், கேரள வியாபாரிகளுக்கு நேரடியாகவும், காய்கறிகளை அனுப்புகின்றனர்.

தமிழக காய்கறிகளில், ரசாயனதன்மை இருப்பதாக கேரளா புகார் கிளப்பியது. தமிழ்நாடு வேளாண் பல்கலை நடத்திய ஆய்வில், அனுமதிக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை மட்டுமே பயன்படுத்தி, காய்கறி உற்பத்தி செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டது.

இதன் பிறகும், கேரளா பிடிவாதமாக உள்ளது. தேசிய ஆய்வகங்களில், சோதனைக்கு உட்படுத்தப்பட்ட காய்கறிகளை மட்டுமே, அனுமதிக்கப் போவதாக கூறியது. பின், தன் நிலையில் இருந்து இறங்கி வந்த கேரளா, தமிழக சுகாதாரத்துறை ஆய்வாளரிடம் பதிவு செய்யப்படும் வாகனங்களில் வரும், காய்கறிகளை மட்டுமே அனுமதிக்கப் போவதாக அறிவித்துள்ளது. இந்த நடைமுறை, வரும், 4ம் தேதி முதல், அமலுக்கு வர உள்ளது.

அதனால், கேரளாவிற்கு காய்கறிகள் அனுப்பும், மாவட்டங்களில் உள்ள சுகாதாரத்துறை ஆய்வாளர் மூலம், வியாபாரிகள் மற்றும் லாரி உரிமையாளர்களுக்கு, சுகாதார சான்று மற்றும் அடையாள அட்டை வழங்கும் பணி துவங்கி உள்ளது. இதற்காக, சிறு வியாபாரிகளிடம், 100 ரூபாய்; பெரிய வியாபாரிகளிடம், 2,000 ரூபாய் கட்டணமாக பெறப்படுகிறது.

**இதுகுறித்து அரசு அதிகாரி ஒருவர் கூறியதாவது:**கேரளாவிற்கு காய்கறி அனுப்புவதில், 200 சிறு வியாபாரிகள் மற்றும் லாரி உரிமையாளர் நேரடியாக ஈடுபட்டு உள்ளனர். இதுவரை, 100 பேருக்கு அடையாள சான்று வழங்கப்பட்டுள்ளது. வரும், 4ம் தேதிக்குள் அனைவருக்கும்

அடையாள சான்று வழங்கப்படும். தமிழகத்தில் இருந்து, காய்கறிகளை, விற்பனைக்கு யார் கொண்டு வருகின்றனர் என்பதை கண்காணிக்கவே, கேரள அரசு இந்த ஏற்பாட்டை செய்துள்ளது. தமிழகத்தில் இருந்து வரும் காய்கறிகளை, யார் வாங்கி விற்பனை செய்கின்றனரோ, அவர்களுக்கும் சுகாதார சான்று வழங்கப்படுகிறது. கேரள மாநில அரசு இந்த ஏற்பாட்டை செய்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

### அடையாள அட்டை வினியோகம்:

கேரளா செல்லும் காய்கறி வாகன டிரைவர்களுக்கு அடையாள அட்டை வினியோகம் செய்யும் பணி, பொள்ளாச்சியில் நேற்று துவங்கியது.இது தொடர்பாக ஆலோசிக்க, நேற்று பொள்ளாச்சி தினசரி காய்கறி மார்க்கெட் வளாகத்தில் அவசர கூட்டம் நடந்தது. இதில், உணவு பாதுகாப்பு அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், வேளாண் விற்பனை பிரிவு அலுவலர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்றனர்.பொள்ளாச்சி காந்தி மார்க்கெட், திரு.வி.க., மற்றும் தேர்நிலை மார்க்கெட்டில் உள்ள மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள், காய்கறி ஏற்றிச்செல்லும் வாகன உரிமையாளர்கள், டிரைவர்கள் தங்களை பதிவு செய்து, போட்டோவுடன் கூடிய அடையாள அட்டையை (உரிமத்தை) பெற்றுக்கொள்ள வேண்டும் என, உணவு பாதுகாப்பு அலுவலர்கள் அறிவுறுத்தினர்.அதன்படி, உடனடியாக, ஆலோசனைக் கூட்டத்திலேயே, 10 டிரைவர்கள் உரிய கட்டணத்தை செலுத்தி, போட்டோவுடன் கூடிய அடையாள அட்டையை, உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்களிடம் பெற்றனர்.

## சென்னையில் இடியுடன் பலத்த மழை

சென்னை: சென்னையில் பல இடங்களில் நள்ளிரவில் பலத்த மழை பெய்தது. கிண்டி, ஈக்காட்டுத்தாங்கல், பல்லாவரம், தாம்பரம், வண்டலூர்,

பல்லாவரம், தி.நகர், மீனம்பாக்கம், சைதாப்பேட்டை வடபழநி உள்ளிட்ட இடங்களில் பலத்த மழை பெய்தது. வடபழநி, கோடம்பாக்கம். நுங்கம்பாக்கம் பகுதிகளில் இடியுடன் பலத்த மழை பெய்தது.

## தமிழகத்தில் கால்நடைகள் பால் உற்பத்தி அதிகரிப்பு

திண்டுக்கல்:தமிழகத்தில் தென்மேற்கு மழை ஓரளவு பெய்து வருவதால், பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதே போல கால்நடைகளின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக மழை இல்லாததால், கடும் வறட்சி ஏற்பட்டது. கண்மாய், குளங்கள், நீர் நிலைகள் தண்ணீர் இல்லாமல் வறண்டன. பல மாவட்டங்களில் குடிநீர் பற்றாக்குறை, கால்நடைகளுக்கு தீவனப்பற்றாக்குறை ஏற்பட்டது. தீவன பற்றாக்குறையால் பால் உற்பத்தி வெகுவாக குறைந்தது. பல விவசாயிகள் கால்நடைகளை வளர்க்க முடியாமல் கால்
நடைகளை அடிமாட்டு விலைக்கு விற்றனர்.கூடுதல் உற்பத்தி: இந்தாண்டு கோடைமழை நன்கு பெய்துள்ளது. தொடர்ந்து தென்மேற்கு பருவமழையும் தற்போது ஓரளவு பெய்துவருகிறது. மேலும் பல குளங்கள், கண்மாய்கள், நீர் நிலைகளில் தண்ணீர் உள்ளது. இதனால் தீவனம் அதிகரித்து கால்நடைகளுக்கு தாராளமாக கிடைத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக பால் உற்பத்தி அதிகமாகியுள்ளது. கடந்த ஜனவரியில் 22 லட்சம் லிட்டராக இருந்த பால் உற்பத்தி தற்போது ரூ.30 லட்சமாக உயர்ந்துள்ளது. இதே போல கால்நடைகளின் எண்ணிக்கையும் கடந்த ஆண்டை காட்டிலும் உயர்ந்துள்ளது.கால்நடை மருத்துவ இணை இயக்குனர் விக்டர் ஜெபராஜ் கூறியதாவது: தொடர்ந்து மழை பெய்து வருவதால் புல் முளைத்துள்ளன. இதனால் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்துஉள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் 2 லட்சத்து 90ஆயிரத்து

200 மாடுகள் உள்ளன. இது கடந்த ஆண்டை காட்டிலும் 10 சதவீதம் அதிகமாகும். இதே நிலைதான் எல்லா மாவட்டத்திலும் உள்ளது. தீவனம் பற்றாக்குறை இல்லாமல் கிடைப்பதால் பால் உற்பத்தியும் அதிகரித்து உள்ளது, என்றார்.

**விவசாய கூட்டுறவு வங்கிகளில் அப்துல்கலாம் பெயரில் மரக்கன்று**

திண்டுக்கல்:விவசாய கூட்டுறவு வங்கிகளில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் பெயரில் மரக்கன்றுகள் நடவும், சிறப்பாக பராமரிக்கும் பணியாளர்களுக்கு பரிசுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.மறைந்த முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம் இளைஞர்களையும், இயற்கையையும் அதிகம் நேசித்தவர். கிராமப்புறங்கள் தன்னிறைவு பெற 'புரா' திட்டத்தை அமல்படுத்தவும், சுற்றுச்சூழல் பராமரிப்பிலும் ஆர்வம் காட்டியவர். அவரின் நினைவாக திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 197 தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகள், 3 கூட்டுறவு விற்பனை சங்கங்கள், 4 நகர கூட்டுறவு வங்கிகளில் மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளர் பழனியப்பன் கூறியதாவது:அனைத்து விவசாய கூட்டுறவு சங்கங்கள் முன்பும் டாக்டர் அப்துல்கலாம் பெயரில் மரக்கன்றுகளை நட்டு வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மரக்கன்றுகளை ஆடு, மாடுகளிடம் இருந்து பாதுகாக்க கம்பி கூண்டு அமைக்கப்படும். இக்கூண்டின் மீது இளைஞர்களுக்கு அப்துல்கலாம் கூறிய தன்னம்பிக்கை, சுற்றுச்சூழல், இந்தியாவை வல்லரசாக்கும் கருத்துக்கள் எழுதி வைக்கப்படும்.அம் மரக்கன்றுகளுக்கு தினமும் தண்ணீர் ஊற்றி, நன்றாக பராமரித்து வளர்க்கும் ஊழியர்களுக்கு பரிசு வழங்கப்பட உள்ளது. ஒரு மரக்கன்று கண்டிப்பாக நட வேண்டும். கூட்டுறவு பணியாளர்கள் விரும்பினால் கூடுதலாக எத்தனை மரக்கன்றுகளும் நடலாம், என்றார்.

## கால்நடை சிகிச்சை முகாம்

திருக்கோவிலூர்:மணலூர்பேட்டை அடுத்த குலதீபமங்கலம் கிராமத்தில், இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடந்தது.மணலூர்பேட்டை கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நடந்த முகாமிற்கு அரிமா சங்க குடும்பசெயலாளர் முருகன் தலைமை தாங்கினார். ஆலோசகர் குழந்தைவேலு, ஓய்வு பெற்ற கரும்பு வளர்ச்சி அலுவலர் ராமலிங்கம் முன்னிலை வகித்தனர்.கால்நடை உதவி இயக்குனர் ராஜன், முகாமை துவக்கி வைத்தார். கால்நடை மருத்துவர்கள் நரேந்திரன் தலைமையிலான மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு 342 பசுக்கள், 320 ஆடுகளுக்கு தடுப்பூசி அளித்தனர். கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம் உள்ளிட்ட சிகிச்சை அளிக்கப்பட்டது.கால்நடை ஆய்வாளர் பிரேமலதா, உதவியாளர்கள் பொம்மி, கலைச்செல்வி ஆகியோர் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்தனர். சிறப்பாக பராமரிக்கப்பட்ட கால்நடைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. டாக்டர் சேகர் நன்றி கூறினார்.

## ரூ.20 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 1, 300 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.அதில், டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,409, குறைந்த பட்சம், 4,027 ரூபாய், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4, 400,

குறைந்த பட்சம், 3, 870 ரூபாய்க்கு ஏலம் போனது. அதேபோல், சுரபி ரகம் அதிக பட்சம், 6, 989, குறைந்த பட்சம், 4, 625 ரூபாய்க்கு ஏலம் போனது.நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 1,300 மூட்டை பருத்தி, 20 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை ஆகிய பகுதிகளை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## சிறுதானியப் பயிர் சாகுபடி குறித்துஆக., 5ம் தேதி இலவச பயிற்சி

நாமக்கல்: சோளம், மக்காச்சோளம் மற்றும் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஆகஸ்ட், 5ம் தேதி காலை, 9 மணிக்கு நடக்கிறது.இது குறித்து, பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்ட அறிக்கை:பயிற்சி முகாமில் சோளம், மக்காச்சோளம் மற்றும் சிறுதானியப்பயிர்கள் சாகுபடியின் முக்கியத்துவம், அதிலுள்ள சத்துக்கள், ரகங்கள், வீரிய ஒட்டு ரகங்கள், விதை நேர்த்தி செய்தல், பயிர் இடைவெளி, மண்பரிசோதனை, விதைக்கும் முறைகள், உர நிர்வாகம் (நுண்ணூட்ட உரம் மற்றும் உயிர் உரம்), களை நிர்வாகம், பல்வேறு வகையான களைக்கொல்லிகளை உபயோகப்படுத்தும் வழிமுறைகள், நீர் நிர்வாகம், சொட்டுநீர்ப்பாசனம், ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் குறித்து விளக்கப்படும். மேலும் இப்பயிற்சியில் மானாவாரி பயிர்களுக்கான விதை கடினப்படுத்துதல் குறித்த செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்படவுள்ளது.இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ, 04286-266345 என்ற தொலைபேசி

எண்ணிலோ தொடர்புகொண்டு, ஆகஸ்ட், 4ம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.பயிற்சிக்கு வரும் விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண்னை கண்டிப்பாக பதிவு செய்யவேண்டும். இவ்வாறு,அதில் தெரிவித்துள்ளார்.

## நாமக்கல் மாவட்டத்தில் 4 ஆண்டுகளில்8.31 லட்சம் கால்நடைக்கு இலவச சிகிச்சை

நாமக்கல் :நாமக்கல் மாவட்டத்தில், கடந்த, நான்கு ஆண்டுகளில் நடத்தப்பட்ட, 816 சிறப்பு முகாம் மூலம், 8.31 லட்சம் கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.இது குறித்து, மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி வெளியிட்ட அறிக்கை:கால்நடை மருத்துவ வசதி கிடைக்கப்பெறாத கிராமங்களில், கால்நடைகளின் நலனை பாதுகாத்திடும் பொருட்டு, கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், கால்நடை பாதுகாப்புத்திட்ட முகாம்களை நடத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார். நாமக்கல் மாவட்டத்தில் உள்ள, 15 யூனியன்களிலும், தலா, 14 முகாம் வீதம், 219 முகாம் இந்த ஆண்டு 2015-16 நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமானது, ஜூலை மாதத்தில், 17, ஆகஸ்ட், 41, செப்டம்பர், 29, அக்டோபர், 42, நவம்பர், 42, டிசம்பர், 38, 2016ம் ஆண்டு ஜனவரி மாதம், 10 என, மொத்தம், 219 முகாம் நடத்தப்படவுள்ளன.கடந்த, 2011-12ம் ஆண்டில், 2 லட்சத்து, 62 ஆயிரத்து, 800 ரூபாய் செலவில், 219 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடத்தப்பட்டு, 31 ஆயிரத்து, 571 விவசாயிகள் வளர்த்து வந்த, 2 லட்சத்து, 37 ஆயிரத்து, 937 கால்நடைகளுக்கும், 2012-13ம் ஆண்டில், 2 லட்சத்து, 62 ஆயிரத்து, 800 ரூபாய் செலவில், 219 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடத்தப்பட்டு, 13 ஆயிரத்து, 498 விவசாயிகள் வளர்த்து வந்த, ஒரு லட்சத்து, 51

ஆயிரத்து, 543 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. கடந்த, 2013-14ம் ஆண்டில், 2 லட்சத்து, 62 ஆயிரத்து, 800 ரூபாய் செலவில், 219 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடத்தப்பட்டு, 28 ஆயிரத்து, 505 விவசாயிகள் வளர்த்து வந்த, 2 லட்சத்து, 21 ஆயிரத்து, 747 கால்நடைகளுக்கும், 2014-15ம் ஆண்டில், 2 லட்சத்து, 62 ஆயிரத்து, 800 ரூபாய் செலவில், 219 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடத்தப்பட்டு, 27 ஆயிரத்து, 465 விவசாயிகள் வளர்த்து வந்த, 2 லட்சத்து, 19 ஆயிரத்து, 860 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.கடந்த, நான்கு ஆண்டுகளில் மொத்தம், 10 லட்சத்து, 51 ஆயிரத்து, 200 செலவில், 876 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடத்தப்பட்டு ஒரு லட்சத்து, 1,039 விவசாயிகள் வளர்த்து வந்த, எட்டு லட்சத்து, 31 ஆயிரத்து, 87 கால்நடைகளுக்கு பல்வேறு சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளது.கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்களில் குடற்புழு நீக்கம், மலடு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

## ஒரு காம்பில் 3 பப்பாளி பழம்

காரைக்கால் :காரைக்காலில் அரிய வகையான பப்பாளி மரத்தில் ஒரு காம்பில் 3 பப்பாளி பழம் காய்ந்து வருகிறது.இதை பார்க்க அக்கம் பக்கத்தினர் அதிசையத்தில் பார்த்து செல்கின்றனர். காரைக்கால் திருநள்ளார் தேனூர் சாலையில் உள்ள ராஜகோபால் என்பவர் தனியார் பஞ்சாலையில் பணியாற்றி ஒய்வுப் பெற்றுள்ளர்.இவரது தோட்டத்தில் அரிய வகையான பப்பாளி மரம் உள்ளது. இம்மரம் கடந்த ஆண்டு காற்று அதிகம் வீசியதால் பப்பாளிமரத்தின் மேல்பகுதியில் சாய்ந்துள்ளது.பின் ராஜகோபால்

குடும்பத்தினர்.இம்மரத்தை பாதுகாத்து வந்ததனர்.பின் ஒரு மரத்தின் மூன்று கிளைகளை கொண்டு ஒரு காம்பு மூலம் 3 மற்றும் 4ங்கு பப்பாளி பழம் காய்த்து வருகிறது.இதுக்குறித்து அருகில் உள்ள வேளாண்துறை அதிகாரி அமினா கூறுகையில். ஒரு பப்பாளி மரத்தில் ஒரு கிளைகள் கொண்டு ஒரு காம்பில் ஒரு பழம் பழுந்து இயல்பு ஆனால். இந்த பப்பாளி மரத்தில் முன்று கிளைகள் கொண்டு ஒரு காம்பில் 3 பப்பாளி காய் வைத்துள்ளது.இது ஒரு அறியவகையான பப்பாளி மரம் என்று கூறினார். இதை பார்க்க அக்கம் பக்கத்தினர் தினம் வந்து பார்வையிட்டு செல்கின்றனர்.

## கொடைக்கானலில் அருகி வரும்வெள்ளை மக்காச்சோள சாகுபடி

கொடைக்கானல்: கொடைக்கானல் பகுதியில் வெள்ளை மக்காச்சோளம் சாகுபடி அருகி வருவதால் வெளியூரில் இருந்து கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. கொடைக்கானல் நட்சத்திர ஏரி என்றாலே சுற்றுலா பயணிகளுக்கு நினைவுக்கு வருவது முத்து முத்தான மக்காச்சோள கதிர்கள்தான். நெருப்பில் சுட்டு, அதில் வெண்ணெய் தடவி, மசால் தோய்த்து விற்பனை செய்து வந்தனர். இதற்காக கொடைக்கானலில் நிறைய இடங்களில் பயிரிட்டு வந்த மக்காசோள கதிர்களை இப்பகுதியில் தற்போது காண இயலவில்லை. தற்போது பெங்களூரு உட்பட பிற பகுதிகளில் வாங்கி விற்பனை செய்கின்றனர். கடந்த 1990 ஆம் ஆண்டுகளில் ரூ.5 க்கு விற்பனை செய்த மக்காசோளக் கதிர்கள் தற்போது ரூ.30 க்கு விற்கப்படுகிறது. கடந்த காலங்களில் நட்சத்திர ஏரி முழுவதிலும் மக்காச் சோளக்கதிர் வியாபாரத்தில் நிறைய வியாபாரிகள் ஈடுபட்டு இருந்தனர். தற்போது ஒரு சிலரே உள்ளனர். சுற்றுலா பயணிகளும் விலையை பொருட்படுத்தாது வாங்கி ருசிக்கின்றனர். நட்சத்திர ஏரி அருகே கடந்த 25 ஆண்டுகளாக

மக்காச்சோளக் கதிரை விற்கும் வியாபாரி ஒருவர் கூறியதாவது: இது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. 25 ஆண்டுகளுக்கு முன் கொடைக்கானலில் வெள்ளை மக்காசோளங்கள் விளைந்தது. தற்போது அவ்வளவாக யாரும் பயிரிடுவதில்லை. ஆனால் சுற்றுலா பயணிகளில் பலர் இதை விரும்புவதால் பெங்களூரு பகுதியிலிருந்து கொள்முதல் செய்து விற்கிறேன். கொடைக்கானலில் மீண்டும் மக்காசோளம் பயிரிட விவசாயிகள் முன்வந்தால் நல்லது. அப்பயிரை அழியாமல் காக்க வேண்டும், என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**காவிரி டெல்டா பாசனத்துக்காக வரும் 9 ஆம் தேதி மேட்டூர் அணை திறப்பு: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**

காவிரி டெல்டா பாசனத்துக்காக, வரும் 9 ஆம் தேதி முதல் மேட்டூர் அணை திறக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இந்த தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக மகசூலைப் பெற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து, வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:

தென்மேற்குப் பருவமழையானது, காவிரி நீர்பிடிப்புப் பகுதியில் பெய்ததால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து, வெள்ளிக்கிழமை (ஜூலை 31) நிலவரப்படி அணையில் 95.91 அடி தண்ணீர் உள்ளது.

காவிரி நீர்பிடிப்புப் பகுதியில் தென்மேற்கு பருவமழையானது ஆகஸ்ட் மாதத்தில் இயல்பானதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. மேலும்,

கர்நாடக நீர்த் தேக்கங்களில் இருந்து காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்படி தமிழகத்துக்கு உரிய பங்கு நீர் கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை இயல்பானதாக இருக்கும் எனத் தெரிவதால், சுமார் 12 லட்சம் ஏக்கர் பரப்பில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா, தாளடி சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக ஆகஸ்ட் 9 ஆம் தேதி முதல் பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும்.

இந்தத் தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக மகசூலைப் பெற வேண்டும்.

குறித்த காலத்தில் திறக்காதது ஏன்: காவிரி டெல்டா பாசனத்துக்காக, ஒவ்வொரு ஆண்டும், மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12 ஆம் தேதியன்று தண்ணீர் திறக்கப்படும். அப்போது அணையின் நீர்மட்ட அளவு குறைந்தபட்சம் தண்ணீர் 90 அடியாக இருக்கும்.

தென்மேற்கு பருவமழையானது, கடந்த ஜூனில் தொடங்கி பின்னர் குறைந்தது. அதனால், மேட்டூர் அணை வழக்கமாக திறக்க வேண்டிய தேதியான ஜூன் 12 ஆம் தேதியன்று அணையின் நீர்மட்டமானது 74.21 அடியாக மட்டுமே இருந்தது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக இருந்ததால், அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக ஜூன் 12 ஆம் தேதியன்று தண்ணீர் திறந்து விட இயலவில்லை என்று தனது அறிவிப்பில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

**நேரடி நெல் விதைப்புக்கு மானியம்: வேளாண்மைத்துறை அறிவிப்பு**

சிவகங்கை மாவட்டத்தில் நேரடி நெல்விதைப்புக்கு மானியம் வழங்கப்படுவதாக வேளாண் இணை இயக்குநர் குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் நெல் முக்கிய பயிராக 67,000 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகின்றது. இதில் 45,000 ஹெக்டேர் நேரடி விதைப்பாகவும், மீதி மானாவாரி பயிராகவும் சாகுபடி செய்யப்படுகின்றது.

ஆடி கடைசி வாரம் முதல் ஆவணி 2-ம் வாரம் வரை நேரடி நெல் விதைப்பு நடைபெறும்.

சிவகங்கை மாவட்டத்தின் சராசரி மகசூல் ஹெக்டேருக்கு 3700 கிலோவாகும்.

இந்த மகசூல் இடைவெளியை குறைத்திடும் பொருட்டு, நடப்பு ஆண்டில் நேரடி நெல் விதைப்பில் வரிசை விதைப்பு என்ற தொழில் நுட்பம் சிவகங்கை மாவட்டத்தில் 7700 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படவுள்ளது. ஹெக்டேருக்கு ரூ.5,000 மானியம் வழங்கப்படும். டிராக்டர் மூலம் கருவி கொண்டு விதைக்கப்படும்.

இளையான்குடி, தேவகோட்டை, கல்லல், சிவகங்கை, மானாமதுரை, சாக்கோட்டை, காளையார்கோவில், கண்ணங்குடி ஆகிய வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நெல் வரிசை விதைப்பின் மூலம் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுகின்றது. விதைகள் சரியான ஆழத்தில் விதைக்கப்படுவதால் முளைப்பு சீராக இருக்கும். பயிர்களுக்கான இடைவெளி நன்கு பராமரிக்கப்படுவதால் நல்ல காற்றோட்டம் மற்றும் சூரிய வெளிச்சத்தின் காரணமாக நன்கு தூர்கள் வெடித்து அதிக மகசூல் கிடைக்கும்.

இந்த தொழில் நுட்பத்தை கடைப்பிடிக்க விரும்பும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு 40 கிலோ நெல் விதைகள், 1 கிலோ பொட்டாஷ், 12.5 கிலோ நெல் நுண்ணூட்ட உரம் மற்றும் திரவ உயிர் உரங்கள் அசோஸ்பைரில்லம் 1 லிட்டர், பாஸ்போபாக்டீரியா 1 லிட்டர் என்ற

அளவில் இடுபொருட்கள் வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் வழங்கப்படும்.

டிராக்டர் மூலம் வரிசை விதைப்பு முடிந்தவுடன் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.2,545 வரவு வைக்கப்படும். விவசாயிகள் பொட்டாஷ், களைக்கொல்லி ஆகியவற்றை தாங்களே வாங்கிக் கொண்டு அதற்கான பட்டியலையும், விதைப்புக்கான செலவின பட்டியலையும் சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலரிடம் தர வேண்டும். ஒரு விவசாயி அதிகபட்சம் 2 ஹெக்டேர் என்ற அளவில் பயன் பெறலாம்.

இந்தத் திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களிடம் உரிய நில உடமை ஆவணங்களின் ஒளிநகலினை கொடுத்து, பதிவு செய்து கொள்ளலாம், என்றார்.

**தரமான விதை உற்பத்திக்கு பயிற்சி**

சாத்தூர் வட்டாரத்தில் தரமான விதை உற்பத்தி செய்ய விதைப் பண்ணையாளர்களுக்கான பயிற்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற பயிற்சிக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சக்கரவர்த்தி தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துச்செல்வி வரவேற்றார். விருதுநகர் விதைச்சான்று உதவி இயக்குநர் ராமமூர்த்தி தரமான விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தார். விதைச்சான்று அலுவலர் குமரன் விதைப்பண்ணை அமைப்பது பற்றியும், சான்று அட்டை பொருத்துவது பற்றியும் எடுத்துரைத்தார்.

விதைப்பண்ணை வயலில் ஆய்வின் போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை ஆய்வாளர் ரவிசங்கர் விளக்கினார். இப்பயிற்சியில்

வெம்பக்கோட்டை, விருதுநகர், சாத்தூர் மற்றும் சிவகாசி வட்டார விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை சாத்தூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துசெல்வி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பொன்ராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

**வேளாண் பல்கலை.யில் தேனீக்கள் வளர்ப்பு பயிற்சி**

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேனீக்கள் வளர்ப்பு குறித்த தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பூச்சியியல் துறை சார்பில் மாதம் தோறும் நடைபெறும் இப்பயிற்சி வகுப்பு வியாழக்கிழமை (ஆகஸ்ட் 6) நடைபெறுகிறது. இதில், தேனீக்களின் இனங்களைக் கண்டறிதல், பெட்டிகளில் தேனீக்களை வளர்க்கும் முறை, நிர்வகிக்கும் முறை, தேனைப் பிரித்தெடுத்தல், தேனீக்களின் இயற்கை எதிரிகள், நோய் நிர்வாகம் உள்ளிட்டவைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இதில், கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்கு பூச்சியியல் துறைக்கு வர வேண்டும். பயிற்சிக் கட்டணமாக ரூ. 250 வசூலிக்கப்படும். பயிற்சி, காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். இதற்கான சான்றிதழ் வழங்கப்படும் என வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சியியல் துறை தெரிவித்துள்ளது.

**"விதை மூலமாகப் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்துகொள்வது அவசியம்'**

விதை மூலமாகப் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த விதைகளை விதைநேர்த்தி செய்துகொள்வது அவசியம் என்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பாசன ஆதாரங்களிலிருந்து காலிங்கராயன், அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருள்கள், விதைநெல், உரம் போன்றவற்றை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் இருப்பு வைத்து தடையின்றி விநியோகம் செய்வது, பயிர்க்கடன் வழங்குவது தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆட்சியர் எஸ்.பிரபாகர் பேசியதாவது:

மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் விவசாயிகளுக்கு நடப்பு பருவத்துக்குத் தேவையான இடுபொருள்களான விதைநெல், உரங்கள் இருப்பு வைத்து விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், நடப்பு தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசனப் பகுதிகளுக்கும், எதிர்வரும் நாள்களில் கீழ்பவானி பாசனப் பகுதிக்கும் ஏற்ற நெல் ரகங்களான ஏ.எஸ்.டி-16, கோ-50, கோ-51, ஏ.டீ.டி-39, கோ-43, ஏ.டீ.டி-38, ஏ.டீ.டி-50, வெள்ளை பொன்னி, கோ-48, கோ-49, ஏ.டீ.டி-44 போன்ற ரகங்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

விதை மூலமாகப் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்து விவசாயிகள் விதைக்க வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் பெவிஸ்டின் அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் மருந்தை கொண்டு விதைநேர்த்தி செய்துதான் விதைக்க வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருள்கள், தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற தங்கள் பகுதி வேளாண்துறை களப்பணியாளர்களை அணுகி

பயன்பெறலாம் என்றார். இக்கூட்டத்தில், வேளாண், கூட்டுறவுத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது**

தமிழக முதல்வர் உத்தரவின்படி, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

அரக்கன்கோட்டை, தடப்பள்ளி வாய்க்கால் வழியாக கோபிசெட்டிபாளையம், அந்தியூர், பவானி வட்டங்களில் உள்ள 24,504 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், முதல் போகப் பாசனத்திற்கு 31.07.2015 ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்வர் உத்தரவிட்டார்.

அதனடிப்படையில், ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை - தடப்பள்ளி வாய்க்கால் வழியாக முதல்போகப் பாசனத்திற்கு கொடிவேரி அணையில் இருந்து மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தண்ணீர் செல்லும் மதகுகளைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், பவானிசாகர் அணைக் கோட்டம் (நீர்வள ஆதார அமைப்பு) செயற்பொறியாளர் எஸ்.நடராஜன், கோபி வட்டாட்சியர் அசோக்குமார், ஈரோடு மாவட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**கோழிகளுக்கு எளிதில் ஜீரணிக்கக்கூடிய தீவனங்களை வழங்க அறிவுறுத்தல்**

நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்த, கோழிகளுக்கு எளிதில் ஜீரணிக்கக்கூடிய தீவனங்களை வழங்க வேண்டும் என பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் அவ்வப்போது மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழை இருக்கும். வெப்ப அளவுகள் ஏற்ற, இறக்கமாக இருக்கும். கடந்த வாரத்தில் காணப்பட்ட அதிக வெப்பத்தால், தீவன எடுப்பு குறைந்து, நோய் எதிர்ப்பு சக்தி கோழிகளில் குறையும் வாய்ப்புள்ளது.

தீவனத்தில், எளிதில் ஜீரணிக்கக்கூடிய, சத்துக்கள் மிகுந்த தரமான தானியம் மற்றும் பிண்ணாக்கு வகைகளைப் பயன்படுத்த வேண்டும்.

விலை குறைந்த கடினமான மூலப் பொருள்களும். பூஞ்சான நச்சு மிகுந்த பொருள்களும் பயன்படுத்தினால், உற்பத்தி குறைவது மட்டுமல்லாமல். நோய் எதிர்ப்பு சக்தியும் குறையும்,

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் ஆய்வு செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும். மேல்மூச்சுக் குழாய் நோய் மற்றும் ஈகோலை கிருமியினால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது.

இதனால், பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் மற்றும் குடிநீரில் ஈகோலை கிருமியின் மாசுபாடு உள்ளதா என ஆய்வகத்தில் ஆய்வு செய்து, உகந்த கிருமி நாசினி மருந்துகளை உபயோகிப்பதுடன் பண்ணை சுகாதார முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

### 4 ஆண்டுகளில் 8.31 லட்சம் கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை

நாமக்கல் மாவட்டத்தில், கடந்த 4 ஆண்டுகளில் நடத்தப்பட்ட 816 சிறப்பு முகாம்கள் மூலம் 8.31 லட்சம் கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்தி: கால்நடை மருத்துவ வசதி கிடைக்கப்பெறாத கிராமங்களில், கால்நடைகளின் நலனை பாதுகாத்திடும் பொருட்டு, கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களை நடத்திட முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 15 ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் தலா 14 முகாம்கள் வீதம் 219 முகாம்கள் இந்த ஆண்டு (2015-16) நடத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாமானது, ஜூலை மாதத்தில் 17 முகாம்களும், ஆகஸ்ட் மாதம் 41, செப்டம்பர் மாதம் 29, அக்டோபர் மாதம் 42, நவம்பர் மாதம் 42, டிசம்பர் மாதம் 38, 2016-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 என மொத்தம் 219 முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

கடந்த 2011-12-ஆம் ஆண்டில், ரூ.2,62,800 செலவில் 219 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, 31,571 விவசாயிகள் வளர்த்து வந்த 2,37,937 கால்நடைகளுக்கும், 2012-13-ஆம் ஆண்டில், ரூ.2,62,800 செலவில் 219 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, 13,498 விவசாயிகள் வளர்த்து வந்த 1,51,543 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

2013-14-ஆம் ஆண்டில், ரூ.2,62,800 செலவில் 219 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, 28,505 விவசாயிகள் வளர்த்து வந்த 2,21,747 கால்நடைகளுக்கும், 2014-15-ஆம் ஆண்டில், ரூ.2,62,800 செலவில் 219 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, 27,465 விவசாயிகள் வளர்த்து வந்த 2,19,860 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகளில், மொத்தம் ரூ.10,51,200 செலவில் 876 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, 1,01,039 விவசாயிகள் வளர்த்து வந்த 8,31,087 கால்நடைகளுக்கு பல்வேறு சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளன.

கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களில், குடற்புழு நீக்கம், மலடு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.

**மானாவாரியில் கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம்: ஆட்சியர்**

அரியலூர் மாவட்டத்தில் மானாவாரியில் கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக ஹெக்டேருக்கு ரூ. 1000 வழங்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

அரியலூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்கு தலைமை வகித்து அவர் மேலும் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு மழை அளவு போதுமானதாக உள்ளது. இம்மாதம் வரை பெறப்பட்ட மழையளவு 297 மி.மீ. இதனை பயன்படுத்தி மானாவாரிப் பயிர்களான கடலை, உளுந்து, மக்காச்சோளம், கம்பு மற்றும் சோளம் பயிரிடலாம்.

மானாவாரியில் கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் கடலை விதைக்கும் கருவியை கொண்டு கடலை மற்றும் ஊடுபயிராக துவரை விதைப்பு செய்ய விதைப்பு மானியம் ரூ. 1000 ஹெக்டருக்கு பின்னேற்பாக வழங்க தமிழக அரசு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், எண்ணெய் வித்து இயக்கத்தின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2015-16 ஆம் ஆண்டுக்கு அரியலூர் மாவட்டத்துக்கு

பொருள் இலக்கீடாக 1000 ஹெக்டருக்கு பின்னேற்பு மானியத் தொகையாக ரூ. 10 லட்சம் வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இம்முறையில் கடலை விதைப்பு செய்யும் விவசாயிகள் தங்களின் நிலத்தின் சிட்டா, அடங்கல் மற்றும் கடலை விதைக்கும்போது எடுக்கப்படும் புகைப்படம் ஆகியவற்றுடன் பின்னேற்பு மானியத்தொகை பெறுவதற்கான உரிய படிவத்தில் பூர்த்தி செய்து, தங்களது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களிடம் அளித்து முன்னுரிமை அடிப்படையில் பயன்பெறலாம்.

மேலும், இவ்விலக்கீடானது அரியலூர் வட்டாரத்துக்கு 200 ஹெக்டேரும், ஜயங்கொண்டம் வட்டாரத்துக்கு 300 ஹெக்டேரும், ஆண்டிமடம் வட்டாரத்துக்கு 300 ஹெக்டேரும் மற்றும் தா. பழூர் வட்டாரத்துக்கு 200 ஹெக்டேரும் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

கடலை விதைக்கும் கருவியைக் கொண்டு விதைப்பு செய்ய குறைவான நேரமே ஆகும். ஆட்கள் தேவை மற்றும் செலவு குறைக்கப்படுகிறது. பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுகிறது. சரியான ஆழத்தில் விதைக்கப்படுவதால் நல்ல முளைப்புத் திறனும், பயிர் போதுமான இடைவெளியுடன் இருக்கும். களை முளைப்புத் திறனும் குறைக்கப்படுகிறது. கைக்களை எடுப்பதில் சிரமம் ஏற்படுவதில்லை.

இத்திட்டத்தில் அரியலூர், ஜயங்கொண்டம், ஆண்டிமடம் மற்றும் தா. பழூர் வட்டார விவசாயிகள் பங்குகொண்டு பயன்பெறலாம் என்றார் ஆட்சியர்.கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பா. ரவீந்திரன், ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் சரஸ்வதி கணேசன், வேளாண் இணை இயக்குநர் (பொ) மனோகரன், தோட்டக்கலை துணை இயக்குநர் கணேசன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**ஆக. 9-ல் மேட்டூர்அணை திறப்பு: விவசாயிகள் வரவேற்பு**

மேட்டூர் அணையிலிருந்து ஆக. 9ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்ற தமிழக முதல்வரின் அறிவிப்புக்கு விவசாயிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து காவிரி விவசாயிகள் சங்க செயலர் தனபாலன் கூறியது: தமிழக அரசு சம்பா சாகுபடிக்கு ஆக. 9ஆம் தேதி தண்ணீர் திறப்பு என்பது வரவேற்கத்தக்கது. இதனால் சம்பா குறித்த நேரத்தில் சாகுபடி செய்ய நல்ல வாய்ப்பாக அமையும். அதேவேளையில் 3ஆம் தேதி ஆடிப்பெருக்கு வரை தண்ணீர் திறந்து விடப்பட்டு, மீண்டும் அடைக்கப்பட்டு தண்ணீர் திறக்கப்படுமானால் இடைப்பட்ட 6 நாட்களில் ஆறுகள் காய்ந்து தண்ணீர் பூமிக்குள் சென்று விடும். இதனால் கடைமடை வரை செல்வதற்கு தாமதமாகும். வெண்ணாறு வடிநிலக் கோட்டப்பகுதிகளில் தற்போது டிகே9- நெல்லானது குறுவை சாகுபடி மூலம் 10 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது அவை முளை விட்டு தண்ணீர் தேவையை எதிர்பார்த்து உள்ளன. தற்போது நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து விட்டதை தொடர்ந்து ஆடிப்பெருக்குக்கு பிறகும் தொடர்ந்து நிறுத்தாமல் தண்ணீர் விட வேண்டும் என்றார்.

**கொய்யாவில் எலிகாது இலைகளை கட்டுப்படுத்தலாம்: தோட்டக்கலைத் துறை**

கொய்யாவில் ஏற்படும் எலிகாது இலைகளை கட்டுப்படுத்தலாம் என்று தோட்டக்கலைத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் (பொ) பொ.மணிமொழி விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் அண்ணாகிராமம் வட்டாரத்தில் அதிக அளவில் கொய்யா சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது பரவலாக மரத்தின் கிளைகளில் உள்ள இலைகள் பொன்மஞ்சள் நிறமாக மாற்றமடைந்து உதிர்ந்து விடுகின்றன.

மேலும் ஒருசில கிளைகளில் வழக்கமான இலைகளை விட எலியின்காது போன்ற வடிவம் கொண்ட சிறுசிறு இலைகள் காணப்படுகின்றன. இதனால் மகசூல் குறைவு ஏற்பட்டு நாளடைவில் மரங்கள் பட்டுப்போகவும் வாய்ப்புள்ளது. இதுபோன்ற பாதிப்பு நுண்ணூட்டச்சத்து குறைபாட்டினால் ஏற்படுகிறது.

இதனைக் கட்டுப்படுத்த துத்தநாகம் சல்பேட், மெக்னீசியம் சல்பேட், மேங்கனீஸ் சல்பேட் தலா 5 கிராம், காப்பர் சல்பேட், பெரஸ் சல்பேட் தலா 2.5 கிராம் என்றவாறு 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து நான்கு முறை தெளிக்க வேண்டும். முதல் முறை துளிர் பருவத்தில் தெளித்து ஒரு மாத இடைவெளிக்குப்பிறகு பூ பூக்கும் பருவம், பிஞ்சு பிடிக்கும் பருவம் மற்றும் காய் பருவம் ஆகிய தருணங்களில் கைத்தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேளையில் தெளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சாமந்தி நாற்று விற்பனை: மேலும், மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் விருத்தாசலம் அரசு தோட்டக்கலைப் பண்ணை மற்றும் நெய்வேலி வட்டம் 4-ல் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில் சாமந்திப் பூவில் ஆரோ கோல்டு, யூனிசம் கோல்டு, மாக்சிமா எல்லோ ஆகிய ரகங்கள் குழித்தட்டு முறையில் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகஸ்ட் மாத இறுதியில் நாற்றுகள் விநியோகத்துக்கு தயாராகும். நாற்று ஒன்றின் விலை ரூ.2.50.

எனவே நாற்றுகள் தேவைப்படும் விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் எண்ணிக்கை மற்றும் நடவு செய்ய உள்ள மாதம் ஆகியவற்றை

சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை அலுவலகங்களில் தெரிவித்து முன்பதிவு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

**சம்பா முன்பருவ பயிற்சி முகாம்**

புதுச்சேரி வேளாண்துறை, பாகூர் உழவர் உதவியகம் சார்பில் விவசாயிகளுக்கான சம்பா முன்பருவ பயிற்சி முகாம் அண்மையில் பாகூரில் நடைபெற்றது.

முகாமை ஆத்மா திட்ட இயக்குநர் ரவிப்பிரகாசம் தொடங்கி வைத்தார். இணை வேளாண் இயக்குநர் சிவசங்கர முருகன் முன்னிலை வகித்தார். துணை வேளாண் இயக்குநர் சிவசுப்பிரமணியன் நோக்கவுரை ஆற்றினார்.

வேளாண் கல்லூரிப் பேராசிரியர் ரத்னசபாபதி, உதவிப் பேராசிரியர்கள் காண்டீபன், சரவணன் ஆகியோர் நெற்பயிரில் பூச்சி, நோய்த்தடுப்பு முறைகள், அதிக மகசூல் பெறுவது குறித்து விளக்கினர்.

உதவி வேளாண் அலுவலர் கலியபெருமாள், விரிவாக்கப் பணியாளர்கள் புவனசுந்தரம், ராமச்சந்திரன், பரமசிவம் மற்றும் பாகூர், குருவிநத்தம், பரிக்கல்பட்டு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 75 விவசாயிகள் கலந்து கொண்டனர். தொழில்நுட்ப மேலாளர் செல்வமுத்து நன்றி கூறினார்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**ஆலமரம் - தினம் ஒரு தகவல்**




ஆலமரம் ஆதிகாலம் தொட்டே இந்தியாவில் இருந்து வருகிறது. குறிப்பாக, இமய மலைச்சாரல் காடுகளிலும், இந்திய தீபகற்பத்தின் மேற்கு, கிழக்கு தொடர்ச்சி மலைச்சரிவுகளிலும் காணப்படுகிறது. சாலை ஓரங்களிலும், ஆலயங்களின் அருகிலும், ஆறுகளின் கரை ஓரங்களிலும் காணப்படுகிறது.

கிராமங்களில் பெருமளவு ஆலமரங்கள் வளர்கின்றன. பரந்து விரிந்து நிழல் தருவதால் கிராம மக்கள் கூடும் இடமாகவும், கிராம வாணிபம் நடைபெறும் இடமாகவும், கால்நடைகளின் உறைவிடமாகவும், கிராம

சங்கங்களின் கூட்டம் நடத்தும் இடமாகவும் ஆலமரங்கள் திகழ்கின்றன. இந்திய நாட்டின் வெப்ப பகுதிகளில் கடும் வெப்பத்தில் இருந்து தங்களை காத்துக் கொள்ள ஆலமரங்களை நடுகிறார்கள். இந்த மரத்திற்கு ஆங்கிலத்தில் பன்யான் ட்ரீ என்று பெயர் வந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. பெர்சியா வளைகுடாவில் பனியாக்கள் எனப்படும் வியாபாரிகள் இறைவணக்கத்திற்காகவும், வியாபாரத்துக்காகவும் இந்த மரத்தின் அடியில் அடிக்கடி கூடுவார்கள். எனவே அந்த மரத்துக்கு ஆங்கிலேயர்கள் பனியாக்களின் பெயரையே அந்த மரத்துக்கு வைத்து விட்டார்கள்.

ஆல மரங்களை கட்டுப்படுத்தாமல் விட்டு விட்டால் இவை தொடர்ந்து பல மீட்டர் அளவுக்கு அகலமாக விழுதுகள் விட்டுச் செல்லக் கூடியவை. பொதுவாக பல சந்தர்ப்பங்களால் ஆல மரங்கள் முழுமையாக வளர முடிவதில்லை. பல இடங்களில் குழந்தைகள் ஆல மரத்தின் விழுதுகளை ஊஞ்சலாக உபயோகிப்பதால் விழுதுகளும், வேர்களும் சேதம் அடைகின்றன. அதனால் அவை நிலத்தினை வந்து அடைவதில்லை. சில இடங்களில் கால்நடைகள் தங்களின் உணவாக ஆல மரத்தில் இருந்து கீழே தொங்கும் இளம் விழுதுகளை உண்கின்றன. இதனாலும் அந்த விழுதுகள் பூமியை வந்து அடைய முடியாமல் தடுக்கப்படுகின்றன.

சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கீதையில் ஆல மரத்தின் பெருமை கூறப்பட்டிருக்கிறது. எவ்வளவுதான் தடுத்தாலும் ஆல மரங்களின் பழங்களை பறவைகள் விரும்பி உண்பதால் அவை பறவைகளால் எடுத்துச் செல்லப்பட்டு நாட்டில் விதைகள் பரவி மரங்கள் மீண்டும், மீண்டும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. எனவே ஆல மரத்துக்கு அழிவில்லை என்கிறார்கள்.

**காவிரி டெல்டா விவசாயிகளின் சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து 9-ந்தேதி தண்ணீர் திறப்பு ஜெயலலிதா உத்தரவு**



சென்னை,

காவிரி டெல்டா விவசாயிகளின் சம்பா மற்றும் தாளடி சாகுபடிக்காக, மேட்டூர் அணையில் இருந்து 9-ந்தேதி முதல் தண்ணீர் திறந்துவிட முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.இதுகுறித்து முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நீர்வரத்து

காவிரி டெல்டா பாசனத்திற்காக, ஒவ்வொரு ஆண்டும், மேட்டூர் அணையில் குறைந்தபட்சம் தண்ணீர் 90 அடியாக இருக்கும்போது, குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12-ந்தேதி மேட்டூர் அணை திறக்கப்படும்.

தென்மேற்கு பருவமழை கடந்த ஜூன் மாதத்தில் கர்நாடகா- கேரளா நீர் பிடிப்பு பகுதிகளில் தொடங்கி பின்னர் குறைவடைந்தது. அதனால், இந்த

ஆண்டு ஜூன் 12-ந்தேதி அன்று மேட்டூர் அணையில் 74.21 அடி தண்ணீர் மட்டுமே இருந்தது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக இருந்ததால், அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக நடப்பாண்டு ஜூன் 12-ந்தேதி அன்று தண்ணீர் திறந்துவிட இயலவில்லை.

குறுவை தொகுப்பு உதவித்திட்டம்கடந்த மூன்றாண்டுகளாக வழங்கியதுபோல், இந்த ஆண்டும் டெல்டா மாவட்டங்களில் விவசாயத்திற்கு 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கவும், திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி அதிக மகசூல் பெறும் வகையில், நடவு எந்திரம் மூலம் நெல் நடவுப்பணிகளை மேற்கொள்ளுதல், தேவைக்கேற்ப ஜிப்சம் பயன்படுத்துதல், நெல் நுண்ணூட்டக்கலவை, உயிர் உரங்கள் பயன்படுத்துதல் ஆகியவற்றை ஊக்குவித்தல் போன்ற திட்டங்களுக்காக 40 கோடியே 97 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலான குறுவை தொகுப்பு உதவித்திட்டத்தினை நான் அறிவித்து அது செயல்படுத்தப்பட்டுள்ளது. ஜூலை மாதத்தில் ஓரளவிற்கு தென்மேற்குப் பருவமழை காவிரி நீர்பிடிப்புக் பகுதியில் பெய்ததினால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து, இன்றைய (31-7-2015) நிலவரப்படி அணையில் 95.91 அடி தண்ணீர் உள்ளது.9-ந்தேதி தண்ணீர் திறப்புகாவிரி நீர்பிடிப்புப் பகுதியில் தென்மேற்கு பருவமழை ஆகஸ்டு மாதத்தில் இயல்பானதாக இருக்கும் என்பதை கருதியும், கர்நாடக நீர்தேக்கங்களிலிருந்து காவிரி நடுவர்மன்ற இறுதி தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீர் கிடைக்கப்பெறும் என்பதை எதிர்நோக்கியும், தற்போது மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பை கருத்திற்கொண்டும், இந்த வருடம் வடகிழக்கு பருவமழை இயல்பானதாக இருக்கும் என்பதை எதிர்நோக்கியும், சுமார் 12 லட்சம் ஏக்கர் பரப்பளவில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா மற்றும்

தாளடி சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, 9-8-2015 முதல் பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக மகசூலைப் பெறவேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பொள்ளாச்சி பகுதியில் நிலக்கடலை அறுவடை பணி தீவிரம் விளைச்சல் குறைந்ததால் விவசாயிகள் கவலை**



பொள்ளாச்சி,

பொள்ளாச்சி பகுதியில் நிலக்கடலை அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. விளைச்சல் குறைவாக உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நிலக்கடலை சாகுபடி

பொள்ளாச்சி பகுதியில் குளத்தூர், தப்பட்டை கிழவன்புதூர், துறவிபாளையம், ஜமீன்காளியாபுரம், வடக்கிபாளையம், நல்லிகவுண்டம்பாளையம் உள்பட பல இடங்களில் 500 ஏக்கர் பரப்பளவில், நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. இந்த பயிரின் காலம் 3 மாதங்கள் ஆகும்.

தற்போது இந்த பகுதிகளில் பயிரிடப்பட்ட நிலக்கடலை அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தரமான நிலக்கடலை ஒரு கிலோவிற்கு ரூ.35–க்கும், 2–வது ரகம் ரூ.32–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வியாபாரிகள் நேரடியாக வந்து நிலக்கடலைகளை கொள்முதல் செய்து செல்கின்றனர்.

விளைச்சல் குறைவு

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

பொள்ளாச்சி பகுதியில் நிலக்கடலை அறுவடை செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டை காட்டிலும், இந்த ஆண்டு விளைச்சல் குறைவாகவே உள்ளது. பருவநிலை மாற்றத்தால் விளைச்சல் குறைந்துள்ளது. ஒரு ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய்தால் அதற்கு உழவு, மருந்து தெளித்தல், அறுவடை கூலி, உரம், அறுவடை என ரூ.30 ஆயிரம் வரை செலவாகிறது. வழக்கமாக ஒரு ஏக்கர் நிலத்தில் 30 மூடைகள் நிலக்கடலை கிடைக்கும். ஆனால் இந்த ஆண்டு 15 மூட்டை தான் கிடைத்துள்ளது. இது எங்களை போன்ற விவசாயிகளை கவலை அடைய செய்துள்ளது.

மேலும் அறுவடை பணிக்கு ஒரு சில இடங்களில் கூலி ஆட்கள் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன..

இவ்வாறு அவர் கூறினார்.

இதே போல் ஆனைமலை பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் இன்னும் ஒரு சில நாட்களில் அறுவடை செய்யும் பணி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வெளிமாநிலங்களுக்கு காய்கறிகள் கொண்டு செல்ல வியாபாரிகள் பதிவு சான்றிதழ் பெற வேண்டும் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உத்தரவு**



பொள்ளாச்சி,

வெளிமாநிலங்களுக்கு காய்கறிகள் கொண்டு செல்ல வியாபாரிகள் உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் பெற்று கொள்ள வேண்டும் என்று உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உத்தரவிட்டு உள்ளனர்.

<u>விவசாயிகள் புகார்</u>

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு காய்கறிகள் கொண்டு செல்லும் போது, நச்சு தன்மை இல்லை என்று சான்றிதழ் கேட்டு, அங்கு உள்ள அதிகாரிகள் லாரிகளை தடுத்து நிறுத்துகின்றனர். இதனால் விவசாயிகள், வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக பொள்ளாச்சி சப்–கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் முறையீட்டு குழு கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

விழிப்புணர்வு முகாம்

இதையடுத்து மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் உத்தரவின் பேரில், உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் கதிரவன் அறிவுரையின் பேரில் உணவு பாதுகாப்புத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை விற்பனைத்துறை ஆகிய துறைகளை சேர்ந்த அதிகாரிகள், வியாபாரிகள் ஆலோசனை கூட்டம் மற்றும் விழிப்புணர்வு முகாம் காந்தி மார்க்கெட்டில் நடைபெற்றது.

முகாமில் வெளி மாநிலங்களுக்கு காய்கறிகள் கொண்டு செல்ல உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது. இதில் உணவு பாதுகாப்புதுறை அலுவலர்கள் சுப்புராஜ், கோவிந்தராஜ், செல்வகுமார், செல்வபாண்டி, காளிமுத்து, தோட்டக்கலைத்துறை அதிகாரி சகாப்தீன் மற்றும் வியாபாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

<u>பதிவு சான்றிதழ் அவசியம்</u>

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:–

உள்ளூர் வியாபாரிகள் வெளிமாநிலங்களுக்கு காய்கறிகள் கொண்டு செல்ல உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் பெற வேண்டியது அவசியம். ஆனால் பொள்ளாச்சியில் உள்ள வியாபாரிகள் யாரும் உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் பெறவில்லை. தற்போது கேரளாவில் அதிகாரிகள்

காய்கறி வாகனங்களை தடுத்து நிறுத்துவதாக தெரிகிறது. இந்த சான்றிதழ்கள் இருந்தால் வெளி மாநில அதிகாரிகள் கேட்கும் போது, காண்பித்து விட்டு சென்று விடலாம்.

பொள்ளாச்சியில் 30 மொத்த வியாபாரிகள், 50 சில்லறை வியாபாரிகள் உள்பட மொத்தம் 80 பேர் உள்ளனர். உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் குறித்து விழிப்புணர்வு முகாம் நாளையும் (இன்று) மார்க்கெட்டில் நடைபெறும். இதுவரை 6 வியாபாரிகள் உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் பெற்று உள்ளனர். பதிவு சான்றிதழ் பெறுவதற்கு ரூ.100, உரிமம் வாங்குவதற்கு ரூ.2 ஆயிரம் கட்டணம் செலுத்த வேண்டும். இதற்கு ஏதாவது ஒரு அடையாள அட்டையின் நகல், ஒரு புகைப்படம் கொண்டு வர வேண்டும். முகாமில் பதிவு செய்யாதவர்கள் புதிய பஸ் நிலையத்தில் செயல்பட்டு வரும், உணவு பாதுகாப்பு துறை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**நிலக்கோட்டை பகுதிகளில் பூச்செடிகள் கருகி வருவதால் விவசாயிகள் கவலை**



நிலக்கோட்டை

நிலக்கோட்டை பகுதிகளில் பூச்செடிகள் கருகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். எனவே நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பூ விவசாயம் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளான மணியகாரன்பட்டி, கோடாங்கிநாயக்கன்பட்டி, நூத்துலாபுரம், முசுவனூத்து, மிளகாய்பட்டி, நரியூத்து உள்பட பல்வேறு கிராமங்களில் சுமார் 400 ஏகஂகரில் விவசாயிகள் பூ விவசாயம் செய்து வருகிறார்கள். இங்கு விளையும் பூகஂகளுகஂகு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்களிலும் தனி கிராகஂகி உள்ளது.இதனால் நிலக்கோட்டையில் மிகப்பெரிய பூ மார்க்கெட்டும் உள்ளது. தற்பொழுது பருவ மழை பொய்த்ததாலும், கடும் வறட்சியினாலும் இப்பகுதியில் பயிரிடப்பட்ட 300 ஏகஂகர் பரப்பளவிலான பூச்செடிகள் கருகிவிட்டது. விவசாயிகள் கண்ணீர்எஞ்சியுள்ள பூச்செடிகளுகஂகு டிராக்டர், லாரி மூலம் தண்ணீர் வாங்கி பாய்ச்சி வருகிறார்கள். ஒரு டிராக்டர் தண்ணீர் ரூ.700-கஂகும், ஒரு லாரி தண்ணீர் ரூ.1500-கஂகும் விலைக்கு வாங்கப்படுகிறது. தண்ணீரை விலைகஂகு வாங்க போதிய வருமானம் இல்லாததால் விவசாயிகள் கண்ணீர் வடித்து வருகின்றனர்.

இதுகுறித்து அந்த பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கூறும்போது, நாங்கள் பூ வியாபாரிகளிடம் கடன் வாங்கித்தான் விவசாயம் செய்கிறோம். தற்பொழுது நிலவும் கடும் வறட்சியினால் பல ஏக்கர் அளவில் பூச்செடிகள் கருகிவிட்டது. அதனால் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் பெரும்பாலான குடும்பங்கள் திருப்பூர், கோவை போன்ற நகரங்களுக்கு பிழைப்பு தேடி சென்றுவிட்டார்கள்.

குளிர்பதன கிடங்கு\விவசாயத்திற்கு போதிய அளவு தண்ணீர் இல்லாததால் விலைகஂ்கு வாங்கித்தான் விவசாயம் செய்து வந்தோம். தற்பொழுது பூக்களின் விலையும் கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால் தண்ணீரை விலைக்கு வாங்குவதையும் நிறுத்தி விட்டோம். இதனால் பூச்செடிகள் கருகி வருகின்றன. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு வறட்சி நிவாரணம் வழங்க வேண் டும். மேலும் நிலக்கோட்டையில் பூகஂ்களை சேமித்து வைகஂ்கும் குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும், என்று கூறினார்கள்.

**மேற்கு கடற்கரையில் மீன்பிடி தடைக்காலம் முடிந்தது குளச்சல் விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்**



குளச்சல்,

மேற்கு கடற்கரையில் மீன்பிடி தடைக்காலம் முடிந்ததை தொடர்ந்து, குளச்சலில் விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

<u>மீன்பிடி தடைக்காலம்</u>

ஆழ்கடல் பகுதியில் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் காலங்களில் மீனவர்கள் விசைப்படகு மூலம், மீன்பிடிக்க ஒவ்வொரு ஆண்டும் 45 நாட்கள் தடை விதிக்கப்படுகிறது.

அதன் படி குமரி மேற்கு கடற்கரை பகுதியில் கடந்த ஜூன் மாதம் 15–ந் தேதி முதல் நேற்று முன்தினம் (ஜூன் 30–ந் தேதி) வரை 45 நாட்கள் மீன்பிடித் தடைகாலம் ஆகும். இந்த காலங்களில் விசைப்படகில் சென்று மீனவர்கள் மீன்பிடிக்க தடைவிதிக்கப்பட்டிருந்தது.

<u>களை கட்டிய துறைமுகம்</u>

அதன் படி தடைகாலம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்ததை தொடர்ந்து மீனவர்கள் நேற்று நள்ளிரவு முதல் விசைப்படகில் கடலில் மீன்பிடிக்க சென்றனர். இந்த மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்கள் தங்களது படகுகளை பழுது பார்த்து தயார் நிலையில் வைத்திருந்தனர்.

நேற்று முன்தினம் காலை முதல் இரவு வரை தங்கள் படகுகளில் மீனவர்கள் குடிநீர், உணவு, ஐஸ்கட்டிகள் மீன்பிடி உபகரணங்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டனர். இதனால் விடிய விடிய குளச்சல் மீன்பிடி துறைமுகம் மீனவர்கள் நடமாட்டத்தால் களை கட்டி இருந்தது.

<u>மந்திரித்தனர்</u>

ஆழ்கடலுக்கு செல்லும் மீனவர்கள் 10 முதல் 15 நாட்கள் வரை படகிலேயே தங்கி இருந்து மீன்பிடித்து விட்டு கரை திரும்புவார்கள். என்பதால் அதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்தனர்.

இதனைத்தொடர்ந்து நேற்று காலை குளச்சல் துறைமுகத்தில் மீனவர்களின் படகுகளை, குளச்சல் காணிக்கை மாதா ஆலய பங்குத்தந்தை வின்சென்ட் எட்வின் தலைமையில், பங்குத்தந்தையர்கள் மந்திரித்தனர். மீனவர்களுக்கு அதிகமாக மீன்கள் கிடைக்கவும், அவர்கள் பாதுகாப்பாக கரை திரும்பவும் ஆசீர்வதித்தனர்.

**பெரம்பலூரில் பலத்த மழை**



பெரம்பலூர்,

பெரம்பலூரில் கடந்த ஒருமாதமாக கோடையை விஞ்சும் வகையில் கடுமையான வெயில் அடித்து வருகிறது. ஆடிமாத தொடக்கம் முதல் இதுவரை 3 முறை சாரல்மழை பெய்துள்ளது. இந்த நிலையில் பெரம்பலூர் நகரில் நேற்று மாலை 5.30 மணி முதல் 5.50 மணிவரை பலத்த மழை பெய்தது. பின்னர் சற்று இடைவெளிவிட்டு மீண்டும் பரவலான மழை செய்தது. பெரம்பலூரை அடுத்த பேரளி, கவுல்பாளையம், அருமடல் பிரிவு, கல்பாடி பிரிவு மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் பரவலான மழை செய்தது. பெரம்பலூரில் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு இந்த மழை பெரிதும் பயனுள்ளவகையில் இருக்கும் என்றும், சுற்றுப்புற கிராமங்களில் ஆடிப்பட்ட விதைப்பு பணிகளுக்கும் பயனுள்ள வகையில் இருக்கும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

**எம்.செட்டிப்பட்டியில் மாட்டுச்சந்தை மீண்டும் கூடியது: வெளிமாநில வியாபாரிகள் வராததால் விற்பனை மந்தம்**



ஓமலூர்,

ஓமலூர் அருகே உள்ள எம்.செட்டிப்பட்டியில் மாட்டுச்சந்தை மீண்டும் கூடியது. ஆனால், மாடுகளை வாங்க வெளி மாநில வியாபாரிகள் வராததால் விற்பனை மந்தமாக இருந்தது.

மாட்டுச்சந்தை

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள எம்.செட்டிப்பட்டி பெருமாள் கோவில் அருகே ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் மாட்டுச்சந்தை நடைபெறுவது வழக்கம். தமிழகம் முழுவதும் உள்ள 135 மாட்டுச்சந்தைகளில் மிகப்பெரிய சந்தைகளில் எம்.செட்டிப்பட்டி சந்தையும் ஒன்றாகும். இந்த சந்தைக்கு உள்ளூர் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் உயர்ரக பசுமாடு,

செர்சி மாடு, எருமை ஆகியவற்றை வியாபாரிகளும், விவசாயிகளும் விற்பனைக்காக கொண்டு வருவார்கள்.

இதேபோல், மாடுகளை வாங்க தமிழகம் மட்டுமின்றி கேரளா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் ஏராளமானோர் வந்து செல்கின்றனர். இதன்மூலம் விவசாயிகள், வியாபாரிகள், தரகர்கள் மற்றும் தொழிலாளர்கள் என ஆயிரக்கணக்கானோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை பெற்று வந்தனர். மேலும், அரசுக்கும் வருவாய் கிடைத்து வருகிறது.

சந்தை ரத்து

இதற்கிடையே, கால்நடை பாதுகாப்பு சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் சார்பில் விற்பனைக்கு கொண்டு வரப்படும் மாடுகள் பறிமுதல் செய்யப்படுவதாகவும், நீதிமன்ற உத்தரவுக்கு பிறகும் பறிமுதல் செய்யப்பட்ட மாடுகள் விடுவிக்கப்படுவதில்லை எனவும் கூறி தமிழ்நாடு மாட்டு வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பு சங்கம் சார்பில் தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்தப்பட்டது. இதன் காரணமாக தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாட்டுச்சந்தைகளும் ரத்து செய்யப்பட்டன. அதன்படி, கடந்த 24-ந் தேதி எம்.செட்டிப்பட்டி மாட்டுச்சந்தையும் ரத்து செய்யப்பட்டது.

மீண்டும் கூடியது

இந்த நிலையில் நேற்று எம்.செட்டிப்பட்டி மாட்டுச்சந்தை மீண்டும் கூடியது. ஆனால், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்காக அழைத்து வரப்படும் இந்த சந்தையில் நேற்று 300-க்கும் மேற்பட்ட மாடுகளே இருந்தன. கடந்த வாரம் சந்தை ரத்து செய்யப்பட்டதால் மாடுகளை வாங்க வியாபாரிகள் அதிகளவில் வரமாட்டார்கள் என்று எண்ணி விவசாயிகள் மாடுகளை கொண்டு வரவில்லை என்று சந்தைக்கு

வந்தவர்கள் தெரிவித்தனர்.இதேபோல் மாடுகளை வாங்க கேரளா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்து வியாபாரிகள் யாரும் வரவில்லை. இதனால் உள்ளூர் வியாபாரிகளே மாடுகளை வாங்கிச்சென்றனர். விற்பனை மந்தமாக இருந்ததால், விற்றதுபோக மீதமிருந்த மாடுகளை சந்தையில் உள்ள மாட்டுக்கொட்டகையில் கட்டிவிட்டு வியாபாரிகள் சென்று விட்டனர். அந்த மாடுகள் அடுத்த வாரம் கூடும் சந்தையில் விற்பனைக்காக நிறுத்தப்படும். அதுவரை சந்தையில் உள்ள தொழிலாளர்கள் அந்த மாடுகளை பராமரிப்பார்கள் என்று அவர்கள் தெரிவித்தனர்.

தினகரன்

**டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து ஆக.9ம் தேதி நீர்திறப்பு**

சென்னை: முதல்வர் ஜெயலலிதா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: காவிரி டெல்டா பாசனத்திற்காக, ஒவ்வொரு ஆண்டும், மேட்டூர் அணையில் குறைந்தபட்சம் தண்ணீர் 90 அடியாக இருக்கும்போது, குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12ம் தேதி அணை திறக்கப்படும். தென்மேற்கு பருவ மழை கடந்த ஜூன் மாதத்தில் கர்நாடகா-கேரளா நீர் பிடிப்பு பகுதிகளில் துவங்கி பின்னர் குறைவடைந்தது. அதனால், இந்த ஆண்டு ஜூன் 12ம் தேதி அன்று மேட்டூர் அணையில் 74.21 அடி தண்ணீர் மட்டுமே இருந்தது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக இருந்ததால், அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக இந்த

ஆண்டு ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறந்து விட இயலவில்லை. ஜூலை மாதத்தில் ஓரளவிற்கு தென்மேற்கு பருவ மழை காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்ததினால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து, இன்றைய நிலவரப்படி அணையில் 95.91 அடி தண்ணீர் உள்ளது.

காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவ மழை ஆகஸ்ட் மாதத்தில் இயல்பானதாக இருக்கும் என்பதை கருதியும், கர்நாடக நீர்த்தேக்கங்களில் இருந்து காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின்படி தமிழகத்திற்கு உரிய பங்கு நீர் கிடைக்கும் என்று நம்புகிறேன். இந்த வருடம் வடகிழக்கு பருவ மழை இயல்பானதாக இருக்கும் என்பதை எதிர்நோக்கி, சுமார் 12 லட்சம் ஏக்கர் பரப்பளவில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா மற்றும் தாளடி சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, வருகிற 9ம் தேதி முதல் பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளேன். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூலை பெற வேண்டும்.

**ஊசி கணவாய் மீன் வரத்து காரைக்காலில் அதிகரிப்பு**

காரைக்கால், : காரைக்கால் மாவட்ட மீனவர்கள் வலையில், ஏற்றுமதி தரம் வாய்ந்த ஊசி கணவாய் மீன் வரத்து துவங்கியிருப்பதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.காரைக்கால் மீன்பிடி துறைமுகத்திலிருந்து சுமார் 20 கடல் மைல் தூரமுள்ள வேதாரண்யம், கோடியக்கரை கடலில் மீன் பிடிக்கும் விசைப்படகு மற்றும் பைபர் படகு மீனவர்களின் வலையில், சாதாரண மீன்களோடு குறைவாக கிடைத்து வந்த ஊசி கணவாய் மீன், தற்போது பெரிய அளவில் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது.

வழக்கமாக கிடைக்கும் ஓட்டு கணவாய் கிலோ ரூ.180 என்றால், ஊசி கணவாய் கிலோ ரூ.80 முதல் ரூ.90 வரை விலை போகும். தற்போது

கிடைக்கும் ஊசிக்கணவாய் மீன் 15 செ.மீட்டருக்கு மேல் இருப்பதால், கிலோ ரூ.120க்கு ஏலம் போனது. ஓட்டு கணவாய் மீனை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும், ஊசிக்கணவாய் கேரளா போன்ற வெளிமாநிலத்திற்கும், உள்ளூரிலும் விற்பனை செய்யப்படுகிறது. முள் இல்லாததால், குழந்தைகள் இந்த ஊசிக்கணவாய் மீனை விரும்பி சாப்பிடுவார்கள்.

**பரமக்குடி பகுதிகளில் கருகி வரும் வெள்ளைதங்கம் நஷ்டத்தை நோக்கி விவசாயிகள்**

பரமக்குடி, : பரமக்குடியை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் பருத்தியை இலைச்சுருட்டை எனும் நோய் தாக்கி வருகிறது. இதனால் பயிர்கள் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். பயிர்களை பாதுகாக்க வேளாண் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். பரமக்குடியை சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் பருத்தி விளைச்சலில் ஈடுபட்டு வருகின்றனர். வெள்ளைத்தங்கம் என அழைக்கப்படும் பருத்தி பயிர் காயிலிருந்து பஞ்சு விளைகிறது. விவசாயிகள் கடன் வாங்கியே பருத்தி விவசாயத்தில் இறங்கியுள்ளனர். ஏற்கனவே போதிய தண்ணீர் வசதி இன்றி, தட்டுத்தடுமாறி விவசாயிகள் பயிரை காப்பாற்றி வருகின்றனர். இந்நிலையில் பயிரை பூச்சிகள் நாசமாக்கி வருகின்றன. இதனால் விவசாயிகள் சோகத்தில் மூழ்கியுள்ளனர். வாங்கிய கடனை எப்படி அடைப்பது என தினம்தினம் புலம்பி வருகின்றனர். குறிப்பாக, இங்குள்ள பருத்தி செடிகளை சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலைகளை தின்னும் பூச்சிகளே அதிகம் தாக்குகின்றன. இந்த பூச்சிகளின் தாக்கம் தினைக்குளம், பாண்டிகண்மாய், மஞ்சூர், காவனூர், பாம்புவிழுந்தான், அண்டக்குடி உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளில்

அதிகமாக காணப்படுகிறது. இந்த பூச்சிகளினால் இலைச்சுருட்டல் எனும் நோய்க்கு ஆளாகும் பயிர்கள், இலைகள் பழுத்து சுருண்டு விடுகின்றன. இதனால் அச்செடிகளில் காய்கள் பிடிப்பது கிடையாது. செடியில் உள்ள பூக்களும் உதிர்ந்து விடுகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து வருகின்றனர். இதுகுறித்து விவசாயி சாத்தையா கூறுகையில், ‘‘பருத்தி செடியை கற்றாழம் பூச்சி கடிப்பதால் இலை சுருட்டை நோய் தாக்குகிறது. தற்போது நோய் எதிர்ப்பு சக்திக்காக பசூக், கிரிபோஸ் போன்ற மருந்துகளை கலந்து அடித்து வருகிறோம். இம்முறை இந்த நோய் தாக்குதலினால் பருத்தி விளைச்சல் குறைந்து வருகிறது. இதனால் கடன் வாங்கி விவசாயத்தில் இறங்கிய எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வேளாண் அதிகாரிகள்தான் நோயை கட்டுப்படுத்தி, பயிர்களை காப்பாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் நாங்கள் பெரும் நஷ்டத்தைதான் சந்திக்க வேண்டி வரும்’’ என்று வேதனையுடன் தெரிவித்தனர்.

காய்கறி விற்பனையாளர்களுக்கு 4ம் தேதிக்குள் உரிமம் வழங்க நடவடிக்கை வேளாண்மை இணை இயக்குநர் பேச்சு

சின்னமனூர், : கேரள மாநிலத்திற்கு செல்லும் காய்கறி விற்பனையாளர்களுக்கு வருகிற 4ம் தேதிக்குள் உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண்மை இணை இயக்குநர் பேசியுள்ளார்.தமிழகத்தில் விளையும் காய்கறிகள் அதிகளவில் கேரளா மாநிலத்திற்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. காய்கறிகளில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கம் அதிகம் இருப்பதாக அம்மாநில அரசு விற்பனைக்கு தடை செய்வதாக தெரிவித்துள்ளனர். இதனால், தமிழக வியாபாரிகள் கலக்கம் அடைந்துள்ளனர். இந்நிலையில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழக அதிகாரிகள் சின்னமனூர் பகுதிகளில் விளையும் காய்கறிகளை தோட்டங்களுக்கு சென்று ஆய்வு

செய்தனர். பின்னர் காய்கறிகளை பல்கலைக்கழகத்திற்கு எடுத்துச்சென்று ஆய்வு செய்ததில், அவற்றில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கம் குறைவாக இருப்பது தெரியவந்தது. இதனடிப்படையில், கேரளாவிற்கு காய்கறிகளை தடையின்றி கொண்டு செல்ல விற்பனையாளர்களுக்கு மத்திய மாநில அரசின் விற்பனை உரிமம் இம்மாதத்தில் வழங்க ஏற்பாடு நடந்து வருகிறது. இந்நிலையில் நேற்று சின்னமனூரில் தினசரி காய்கறி உற்பத்தியாளர்கள் இடையே நடந்த ஆலோசனை கூட்டத்திற்கு வேளாண்மை இணை இயக்குநர் வெங்கடசுப்பிரமணியன் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசியதாவது:

ரூ.4 ஆயிரத்துக்கும் குறைவாக விற்பனை செய்யும் வியாபாரிகள் ரூ.2 ஆயிரம் செலுத்தி புகைப்பட சான்று, ஆதார், குடும்ப அட்டை நகல் 2ம், புகைப்படத்துடன் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். இதன் மூலமாக விற்பனை உரிமம் நடப்பாண்டில் வருகிற 4ம் தேதிக்குள் வழங்கப்படும். இதன் மூலமாக எந்த வெளி மாநிலத்திற்கும் தடையின்றி காய்கறிகளை விற்பனை செய்யலாம். விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்க அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இங்கு விளையும் காய்கறிகளை ஆய்வு செய்ததில் பூச்சிக்கொல்லிகளின் தாக்கம் குறைவாக உள்ளது தெரியவந்துள்ளத என கேரளாவின் அறிவிப்பிற்கு மறுப்பு தெரிவித்தார். கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குநர் ரெங்கநாதன், வேளாண் விற்பனைத்துறை துணை இயக்குநர் முத்தையா, சின்னமனூர் வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன், தோட்டக்கலை உதவி இயக்குநர் சுரேஷ், வேளாண் விற்பனைத்துறை, தோட்டக்கலைத்துறை, தேசிய உணவுக்கழகம் ஆகிய துறை உயர் அதிகாரிகள், விவசாயிகள், விற்பனையாளர்கள் கலந்து கொண்டனர்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை ஒன்றியம் ஆசனூர் கிராமத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் கால்நடைகள் பாதுகாப்பு சிறப்பு முகாம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் சாந்திசெல்வராஜ் துவக்கி வைத்தார். திருக்கோவிலூர் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குனர் ராஜன் தலைமையில் கால்நடை மருத்துவர்கள் முருகேசன், தமிழ்மணி, கவிதா ஆகியோர் கொண்ட குழுவினர் 530 ஆடு மற்றும் மாடுகளுக்கு தடுப்பூசி போட்டனர்.

குடற்புழுக்கம், ஆண்மை நீக்கம், சினை ஆய்வு, செயற்கை முறைகருவூட்டல் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதே போல் 200க்கும் மேற்பட்ட கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. முகாமில் 985 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. சிறந்த முறையில் 10 கிடேரி கன்று வளர்த்தவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும் விவசாயிகளுக்கு அசோலா வளர்ப்பு குறித்து செயல்துறை விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உள்ளிட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**பயிர் பாதுகாப்புக்கு விதை நேர்த்தி அவசியம் வேளாண்துறை ஆலோசனை**

பழநி, : பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி செய்வது அவசியம் என வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். இதுகுறித்து வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்ததாவது: குழந்தைகளுக்கு பிற்காலத்தில் வரக்கூடிய கக்குவான், போலியோ போன்ற நோய்கள் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசிகள், சொட்டு மருந்துகள் கொடுப்பதைப் போலவே, பயிர்களை விதை மூலம் பரவக்கூடிய பூஞ்சான் நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு விதையுடன் பூஞ்சான்

மருந்து கலந்து விதை நேர்த்தி செய்திட வேண்டும். விதை மூலம் பரவும் இலைப்புள்ளி, இலைக்கருகல், இலை உறை அழுகல் மற்றும் குலை நோய் போன்ற பூஞ்சான் நோய்களை தடுக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் -"கார்பன்டைசிம்" கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும்.இல்லாவிட்டால் 1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் "டிரைக்கோ டெர்மாவிருடி" அல்லது 1 கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் "சூடோமோனாஸ் ப்ளாரசன்ஸ்" என்ற உயிரியல் பூஞ்சான் மருந்தை விதைப்பதற்கு முன் கலந்து விதைக்க வேண்டும்.

1 ஏக்கர் விதைக்க தேவையான விதைக்கு விதை நேர்த்தி செய்ய 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை செலவாகும். ஆனால், விதை நேர்த்தி செய்வதால் பயிர் வளர்ச்சி காலத்தில் நோய்கள் தாக்கி, அவற்றை கட்டுப்படுத்த மருந்திற்கு செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. நெல், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு விதைநேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு அசோஸ்பைரில்லம் 1 பாக்கெட் ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான் விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும்.

நிலக்கடலை மற்றும் பயிறு வகைகளுக்கு விதை நேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு "ரைசோபியம்கல்ச்சர்" 1 பாக்கெட்டை ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான் விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின் விதைக்க வேண்டும். உயிர் உர விதை நேர்த்தி செய்வதால், உயிர் உரங்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கொடுக்கும். அதனால் இளம் பயிரின் இலைகள் கரும்பச்சை நிறத்துடன் செழிப்பாக வளரும். பயிர்கள் கூடுதல்

மகசூல் கொடுக்கும். இதனால் கால் பங்கு தழைச்சத்து இடுவதை குறைக்கலாம். அதன் மூலம் உரச்செலவை குறைக்கலாம். எனவே விவசாயிகள் பூசனக் கொல்லி விதை நேர்த்தி செய்து பயிர்களை நோய்களிலிருந்து வருமுன் காக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**ஆக.9-ல் மேட்டூர் அணை திறப்பு: முதல்வர் உத்தரவு**



காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா மற்றும் தாளடி சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, ஆகஸ்ட் 9-ம் தேதி முதல் பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "காவேரி டெல்டா பாசனத்திற்காக, ஒவ்வொரு ஆண்டும், மேட்டூர் அணையில் குறைந்தபட்சம் தண்ணீர் 90 அடியாக இருக்கும் போது, குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும்.

தென்மேற்கு பருவ மழை கடந்த ஜூன் மாதத்தில் கர்நாடகா–கேரளா நீர் பிடிப்பு பகுதிகளில் துவங்கி பின்னர் குறைவடைந்தது. அதனால், இந்த ஆண்டு ஜூன் 12-ஆம் தேதி அன்று மேட்டூர் அணையில் 74.21 அடி தண்ணீர் மட்டுமே இருந்தது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக இருந்ததால், அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்காக நடப்பாண்டு ஜூன் 12-ஆம் தேதி அன்று தண்ணீர் திறந்து விட இயலவில்லை.

கடந்த மூன்றாண்டுகளாக வழங்கியது போல், இந்த ஆண்டும் டெல்டா மாவட்டங்களில் விவசாயத்திற்கு 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கவும், திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி அதிக மகசூல் பெறும் வகையில், நடவு இயந்திரம் மூலம் நெல் நடவுப் பணிகளை மேற்கொள்ளுதல், தேவைக்கேற்ப ஜிப்சம் பயன்படுத்துதல், நெல் நுண்ணூட்டக் கலவை, உயிர் உரங்கள் பயன்படுத்துதல் ஆகியவற்றை ஊக்குவித்தல் போன்ற திட்டங்களுக்காக 40 கோடியே 97 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலான குறுவை தொகுப்பு உதவித் திட்டம் அறிவிக்கப்பட்டு அது செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஜூலை மாதத்தில் ஓரளவிற்கு தென்மேற்குப் பருவ மழை காவேரி நீர்பிடிப்புக் பகுதியில் பெய்ததினால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து, இன்றைய (31.7.2015) நிலவரப் படி அணையில் 95.91 அடி தண்ணீர் உள்ளது.

காவேரி நீர்பிடிப்புப் பகுதியில் தென்மேற்கு பருவ மழை ஆகஸ்ட் மாதத்தில் இயல்பானதாக இருக்கும் என்பதை கருதியும், கர்நாடக

நீர்தேக்கங்களிலிருந்து காவேரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீர் கிடைக்கப் பெறும் என்பதை எதிர்நோக்கியும், தற்போது மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பை கருத்திற்கொண்டும், இந்த வருடம் வடகிழக்கு பருவ மழை இயல்பானதாக இருக்கும் என்பதை எதிர்நோக்கியும், சுமார் 12 லட்சம் ஏக்கர் பரப்பளவில் காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா மற்றும் தாளடி சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, 9.8.2015 முதல் பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட ஆணையிட்டுள்ளேன். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக மகசூலைப் பெற வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்"

இவ்வாறு முதல்வர் ஜெயலலிதா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.